### சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றி மதக் கலவரத்தைத் தடுக்க

# தமிழ்நாடு அரசு எடுத்த - 144 தடை உத்தரவு வரவேற்கத்தக்க ஒன்று!

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, டிச.6-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது என்ற பெயரால், சட்டத்திற்கு முரணான மதக் கலவரத்தை உண்டாக்குவதா? இதற்கு உயர்நீதிமன்ற நீதிபதி துணை போவதா? சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு எடுத்துள்ள 144 தடை நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அமைதிப்பூங்காவாகத் திகழும் தமிழ்நாட்டில் கல்வியிலும், மருத்துவத்திலும், சமூகநீதியிலும், பெண்ணுரிமையிலும் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு எதிராகப் பலவிதத் தடைகளை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியும், அதன் அமைப்புகளும் திட்டமிட்டே கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவது உலகறிந்த செய்தியாகும்!

**போட்டி அரசை நடத்தும் ஆளுநர் ஆர்.என்.ரவி!**

அரசியலமைப்புச் சட்டத்தின்மீது பதவிப் பிரமாணம் எடுத்தும், அதனை அப்பட்டமாக அனுதினமும் மீறி, தமிழ்நாடு ஆட்சியை எதிர்த்து “ஒரு போட்டி அரசை” நடத்தி, அவதூறுகளை அள்ளி நாளும் பரப்பிக் கொண்டுள்ளது ஆளுநர் ஆர்.என்.ரவி என்பவர் மூலம்.

தமிழ்நாட்டிற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய, தர வேண்டிய ஒன்றிய அரசு நிதிகளைத் தராமல், தங்களது ஆர்.எஸ்.எஸ். கொள்கைத் திணிப்பைக் கல்வித் துறையில் ஏற்றால் மட்டுமே ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்குரிய கல்வி நிதி, மற்ற நிதிகளை வழங்குவோம் என்று கூறி, நிதி நெருக்கடிமூலம் தமிழ்நாட்டுத் ‘திராவிட மாடல்’ அரசைப் பணிய வைக்க திட்டமிடுகிறது.

இதற்குமுன் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வித்தைகள், ரோட் ஷோக்கள் (Road Shows), காட் ஷோக்கள் (God Shows) போன்றவற்றைப் பிரதமர் மோடி பலமுறை வந்து நடத்தியும், புதுவை மாநிலம் உள்பட 40 இடங்களிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று, தமிழ்நாடு பெரியார் மண், சமூகநீதி மண், திராவிட மண் என்பதை நிரூபித்துவிட்டது.

வரும் 2026, ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலும் அது தொடரக்கூடும் என்பதைப் புரிந்து, அதனைத் தடுக்கும் நோக்கில், ஒரு புது முயற்சியில், குறுக்கு வழி குல்லுகப்பட்டர்கள்மூலம் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஒன்றிய அரசு முயற்சிக்கிறது!

அதுதான் அமைதிப் பூங்காவாக - மதக்கலவரம் என்றால் என்னவென்றே அறியாத தமிழ் மண்ணை - அமளிக்காடாய் ஆக்கி, ஏதோ சட்டம் ஒழுங்குப் பிரச்சினை இங்கே பெருமளவில் இருப்பது போன்று ஒரு ‘பூதாகரமான’ நிலையை, சட்டமன்றத் தேர்தல் வரவிருக்கும் இந்தக் காலகட்டத்தில் உருவாக்க முயலுவதற்கு ஓர் எடுத்துக்காட்டு நிகழ்ச்சியே 3.12.2025 அன்று திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றுள்ளது. தீபம் ஏற்றும் நிகழ்ச்சி என்ற பெயரில், மதவாத சக்திகள் தங்கள் விஷமத்தின் மூலம் - மதக் கலவரத்திற்கு ஏற்பாடு செய்யத் தீவிரமாக முயற்சித்துள்ளனர்.

இவர் தந்த தீர்ப்பை ஏற்காத தமிழ்நாடு அரசு, முறைப்படி மேல்முறையீடு செய்துள்ள நிலையில், உடனடியாக அவசரமாக அங்கு தீபம் ஏற்றும் நிகழ்ச்சியை நடத்த, சில ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர்களை அனுப்பி, மாநில அரசின் சட்டம் - ஒழுங்கு பராமரிப்பிற்கு எதிராகக் கலவரத்தைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, கடமையாற்றிய காவலர்களைத் தாக்கி, காயப்படுத்தும் அளவிற்குக் காலித்தனத்திலும் ஈடுபட்டுள்ளது வன்மையான கண்டனத்திற்குரிய நடவடிக்கை ஆகும்!

இந்த 144 தடை உத்தரவினை மீறும் கும்பலுக்குப் பாதுகாப்பாக ஒன்றிய அரசின் சி.அய்.எஸ்.எஃப். என்ற மத்திய போலீசையும் உடன் அனுப்புவது எதைக் காட்டுகிறது?

ஒரு பக்கம் ஆர்.எஸ்.எஸ். சார்பு நீதிபதியின் அவசர ஆணை - மாவட்ட ஆட்சியரை மிரட்டிய நீதிமன்றப் பேச்சு - கூடுதலாக சட்டத்தை மீறுவோருக்கு ஒன்றிய அரசின் காவல் படை.ப் பாதுகாப்பு!

அதைவிடக் கொடுமை, 144 தடை உத்தரவை மீறி, மதக் கலவரத்திற்குத் தூபம் போட்டு, தீபம் ஏற்றும் முயற்சி என்ற போர்வை போர்த்திக் கொண்ட காவிக் கூட்டத்தாருக்கு ஆதரவாக, ஒன்றிய அரசின் காவல் படையும் உடன் செல்வதா?

இதைத் தமிழ்நாடும், நியாய உணர்வாளர்களும் பொறுத்துக் கொண்டு வேடிக்கைப் பார்க்க முடியுமா?

தேவையானால், மதுரைக்கோ அல்லது திண்டுக்கல்லுக்கோ விரைவில் சென்று, மக்கள் மன்றத்தில், மக்களிடம் நியாயம் கேட்க நாம் தயாராக உள்ளோம்.

மக்கள் மன்றம், நீதிமன்றத்தைவிட பெரியது. காரணம், அரசியலமைப்புச் சட்டம், மக்களே தமக்குத் தாமே வழங்கிய உரிமை ஆவணம் ஆகும்!

**தமிழ்நாடு அரசின் உறுதியான நிலைப்பாட்டினை வரவேற்கிறோம்!**

தமிழ்நாடு அரசும், அதன் துறைகளும் இதில் எடுத்த தெளிவான, உறுதியான நிலைப்பாட்டினை வரவேற்கிறோம். அதிகாரிகளுக்குத் தமிழ்நாடு அரசு போதிய பாதுகாப்பு, ஆதரவு வழங்க, தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# மனிதநேய உதய நாள் விழா கருத்தரங்கம் மதினாவில் நடைபெற்றது!

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையுரை!





மதினா, டிச.6-

சவுதி மேற்கு மண்டல திமுக அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.இஸ்மாயில் - அபு இன்பன் ஏற்பாட்டில் மனிதநேய உதய நாள் விழா கருத்தரங்கம் மதினாவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்று தலைமையுரையாற்றிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் பேசுகையில் கடல் கடந்து அயல் நாட்டில் வாழும் தமிழர்களுக்காக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், கழகத்தலைவர், திராவிட மாடல் ஆட்சி நாயகர், முதல்வர் அவர்களும் செய்த திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க “முதல்வர் அவர்கள் “புலம்பெயர் தமிழர் நல வாரியத்தை” கடந்த ஆண்டு தொடங்கிவைத்ததை நினைவு கூர்ந்ததுடன் புலம்பெயர் தமிழர் நலனுக்காக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான புலம்பெயர் தமிழர் குறித்த தரவுத் தளம் (Database). இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டம்,

வெளிநாட்டுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை திட்டம்,

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு எனத் தனியாகச் சட்ட உதவி மையம், புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், ஊர் மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் ‘எனது கிராமம்’எனும் திட்டம்.

முதலிய பல்வேறு திட்டங்களை பட்டியலிட்ட அவர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ம் நாளை ‘புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக்’ கொண்டாடப்படும் என்ற முதல்வர் அவர்களின் அறிவிப்பை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். மேலும் தமிழர்கள் கடல் கடந்தவர்களாயினும், தேசம் தாண்டி புலம் பெயர்ந்தவர்களாயினும் தமிழர்களின் நலன் காக்கும் ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்ற கழகம் என்றுரைத்தார்.

பாசிசம் சிறுபான்மையின மக்களை வீழ்த்த எண்ணி கொண்டுவந்த என்.ஆர்.சி, சி.ஏ.ஏ., என்.பி.ஆர். மற்றும் புதிய வக்ப் திருத்தச்சட்டம் மற்றும் அடிப்படை வாக்குரிமையை பறிக்கத் துடிக்கும் SIR போன்ற எத்தகைய சதிகார திட்டமாக இருந்தாலும், சிறுபான்மையின மக்களின் பக்கம் நின்று உரிமைகளைக் காக்கும் துணிச்சல் மிக்க இளம் தலைவர் துணை முதல்வர் அவர்கள் தான் என்றதுடன், அவரின் பிறந்தநாள் விழாவினை பெருமைமிகு அயல்நாடு வாழ் தமிழர்களுடன் கொண்டாடுவதில் முகுந்த பெருமை கொள்வதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் அயலக தமிழர்கள் என்றால், தமிழ் மொழி, பண்பாடு, மற்றும் பாரம்பரியத்தை உலகெங்கும் பரப்பும் தூதுவர்கள் நீங்கள். நீங்கள் வாழும் நாடுகளில் தமிழினத்தின் பெருமையை உயர்த்தும் பணியை நீங்கள் செவ்வனே செய்து வருகிறீர்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை கற்பித்து, அவர்களின் வேர்களை அறியச் செய்யுங்கள். தமிழ் பண்பாட்டின் அருமைகளை அவர்களுக்கு உணர்த்துங்கள். நம் முன்னோர்களின் தியாகங்களையும், போராட்டங்களையும் எடுத்துரைத்து, அவர்களை உயர்த்துங்கள். ஒற்றுமையே நமது பலம். தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, தமிழ் இனம் என்ற உணர்வோடு ஒன்றுபடுவோம். உலகெங்கும் தமிழினத்தின் பெருமையை பறைசாற்றுவோம் என கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் சவுதி மேற்கு மண்டல தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.இஸ்மாயில்@ அபு இன்பன் அவர்கள் சிறப்புரையாட்ற, விழாவில் மதினாவில் 42 ஆண்டுகளுக்கு மேலாக புனித உம்ரா பயணிகளுக்கு சேவை செய்து வரும் கழக முன்னோடிகள் ஜமால் ஜாகிர், அப்துல் சலாம் ஆகியோருக்கு பட்டயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ந்நிகழ்வில் குஜாமுதீன், ஆசிப் அலி சேட், சேக் மதுரை, கழக மகளிர் அணி நிர்வாகி திருமிகு. நசூகா உள்ளிட்ட பலர் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

# 2 கோடியே 24 இலட்சம் பனை விதைகள் நடவு செய்தவர்களுக்கு சான்றிதழ்!

## சர்வதேச தன்னார்வலர்கள் தினத்தில் வழங்கப்படுகிறது!

சென்னை, டிச.6-

தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் இணைந்து முன்னெடுத்து வரும் “பனை விதை நடும் நெடும்பணி - 2025” மாநிலம் முழுவதும் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு ஊராட்சிக்கும் 5,000 விதைகள் என்ற இலக்குடன் செப்டம்பர் 16 அன்று தொடங்கிய இந்த இயக்கம், இன்று வரை 2 கோடி 24 இலட்சம் பனை விதைகள் நடவு செய்யப்பட்டு வரலாற்று சாதனையாகப் பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டின் 46 இலட்சம் விதைகள் நடவு எண்ணிக்கையை விட ஆறு மடங்கு அதிகம்.

பனை விதைகள் நடவு செய்யப்பட்ட அனைத்து இடங்களும் உதவி செயலி (Udhavi.app/panai) மற்றும் GTM செயலி வழியாக புகைப்படம் மற்றும் அட்சரேகை-தீர்க்கரேகை (GeoTag) உடன் பதிவு செய்யப்பட்டுள்ளதால், நடவு இடங்கள், வளர்ச்சி நிலை, பராமரிப்பு ஆகியவை தெளிவாக கண்காணிக்கப்படுகின்றன. அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அரசு அங்கீகரிக்கப்பட்ட QR குறியீடு கொண்ட சான்றிதழ்கள் தானியங்கியாக வழங்கப்படும், இது வேரூன்றி வளரும் மரங்களை உறுதிப்படுத்தும் முறையான பதிவு ஆகும்.

தமிழ்நாடு முழுவதும் பனை விதை நடவு பணியில் மாவட்டங்கள் தங்கள் சிறப்புத் திறனையும் மக்கள் பங்களிப்பையும் வெளிப்படுத்தி வரலாற்று சாதனைகளை ஏற்படுத்தியுள்ளன. மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த சுற்றுச்சூழல் இயக்கத்தில், பல மாவட்டங்கள் தங்கள் இலக்குகளை மீறி செயல்பட்டு, தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள பசுமை நோக்கை வலுப்படுத்தியுள்ளன.

திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்கள் முதன்மை இடத்தை பிடித்து 20 லட்சத்தை கடந்தது.

சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் தலா 18 லட்சம் விதைகள் நடவு செய்து தொடர்ந்து முன்னிலை வகித்தன. திருப்பத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் தலா 10 லட்சம் விதைகள் நடவு செய்து வலுவான பங்களிப்பை வழங்கின. ஏராளமான விதைகள் நடவு செய்த மற்ற முக்கிய மாவட்டங்கள்:

ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், கடலூர், திருப்பூர், சேலம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, தேனி, கள்ளக்குறிச்சி—இவை அனைத்தும் மக்கள் பங்கேற்பு மற்றும் சிறந்த நிர்வாக ஒருங்கிணைப்பின் எடுத்துக்காட்டுகளாக அமைந்தன. மலைப் பகுதி காரணமாக நிலகிரி மாவட்டத்தைத் தவிர, மொத்தம் 37 மாவட்டங்களில் பனை விதை நடவு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடை பெற்றது.

இந்த பசுமை இயக்கத்தின் சிறப்பான வெற்றி, மாவட்ட ஆட்சியர்கள், வனத்துறை அதிகாரிகள், ஊரக வளர்ச்சி துறை, வனவியல் விரிவாக்க அலுவலர், முதலமைச்சரின் பசுமைத் தோழர்கள், தன்னார்வலர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், மாவட்ட அளவில் உள்ள தொண்டு அமைப்புகள், மற்றும் தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பின் இடையறாத ஒருங்கிணைப்பு ஆகியோரின் கூட்டுப் பங்களிப்பால் சாத்தியமானது.

**பனை மரம் - தமிழரின் மரபு மரம்**

பனைமரம் தமிழ்நாட்டின் மாநில மரமாகும். ஆயிரம் ஆண்டுகளாக தமிழரின் வாழ்க்கை, பண்பாடு, உணவு, மருத்துவம், வாழ்வாதாரம் ஆகிய அனைத்துடனும் இணைந்த மரம். பனை மரம் பூமியின் கற்பக விருட்சம் எனப் போற்றப்படுகிறது, ஏனெனில் அதன் ஒவ்வொரு பகுதியும் மனித வாழ்விற்குப் பயனளிக்கக் கூடியது.

இந்தியாவில் உள்ள 10 கோடி பனைமரங்களில் 5 கோடி தமிழ்நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. பனைமரம் விவசாயிகளுக்கு கோடைகாலங்களில் நுங்கு, பனங்கிழங்கு, கருப்பட்டி போன்ற பொருட்கள் மூலம் வாழ்வாதாரம் அளிக்கிறது. ஆனால் பனை பொருளாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பது பல விவசாயிகள் இன்னும் வறுமையில் வாழ்வதற்கான காரணமாகக் கருதப்படுகிறது.

பனை மரத்தின் பல்வேறு நன்மைகள் மாநிலத்திற்கு உயிர்காக்கும் அங்கமாக விளங்குகின்றன. இது நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதிலும், கடற்கரை மண் அரிப்பைத் தடுக்கவும், கார்பன் டை ஆக்சைடு உறிஞ்சி ஆக்சிஜன் வெளியிடவும், வறட்சியிலும் வளரவும், 100 ஆண்டுகள் நீடிக்கும் பசுமைச் சின்னமாகவும் விளங்குகிறது. “நீரின்றி அமையாது உலகு” என்ற திருக்குறள் உண்மையை பனைமரம் தன்னகத்தே தாங்கி நிற்கிறது.

**33% பசுமை இலக்கை நோக்கிய முன்னேற்றம்**

தமிழ்நாடு அரசு மாநிலத்தின் நிலப்பரப்பில் 33% தாவர வளத்தை உருவாக்கும் பசுமை இலக்கை முன்னெடுத்து வருகிறது. இதற்கான இயற்கைத் தீர்வாக பனைமரம் சிறந்த தேர்வாக அமைந்துள்ளது. மண், காற்று, நீர், பல்லுயிர் அனைத்தையும் ஒருங்கிணைத்து பாதுகாக்கும் திறன் கொண்ட மரம் என்பதால் பனை விதைகள் நடவு மாநிலத்தின் நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தில் முக்கிய பங்காற்றுகிறது.

**சர்வதேச தன்னார்வலர்கள் தினத்தில் அரசு சான்றிதழ்கள்**


இயற்கையை பாதுகாக்கும் உயர்ந்த நோக்கத்துடன் பனை விதைகள் நடவு செய்த தன்னார்வலர்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அனைவரும் தங்களது உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களை உதவி செயலி (Udhavi..app/panai) மூலம் பெற்றுக் கொள்ளலாம். சான்றிதழ்கள் QR குறியீடு கொண்டதால், போலியான/மறுபடியும் பயன்படுத்தப்படும் சான்றிதழ்களைத் தடுக்கும் கடுமையான சரிபார்ப்பு அமைப்பு கொண்டு வரப்பட்டது.

இன்னும் நடவு செய்தும் பதிவேற்றம் செய்யாதவர்கள் உடனடியாக உதவி செயலியில் பதிவேற்றி, டிசம்பர் மாத இறுதி தேதிக்கு முன் செயல்முறையை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம். தண்டபாணி

### டிசம்பர் 6 (2012)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தென்சென்னை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும், மயிலைப் பகுதி துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

முரசொலி நாளிதழின் செய்தியாளராகவும் – மருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கள்ளக்குறிச்சி — திருக்கோவிலூர்

# அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு!

சுகள்ளக்குறிச்சி, டிச.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் அம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவு, ஆய்வகம், உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு, வெளி மருத்துவ பயனாளிகள் பிரிவு, மருந்தகம், சித்த மருத்துவப் பிரிவு போன்ற மருத்துவ கட்டமைப்பு வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ரூ.53 கோடி மதிப்பீட்டில் இம்மருத்துவமனை வளாகத்தில் கட்டடப்பட்டு வரும் கூடுதல் கட்டிடப் பணிகளை விரைந்து முடிக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## தமிழ்நாடு துணை முதலமைச்சர், திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

### திருவண்ணாமலையில் நடைபெறும் திமுக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் பங்கேற்கும்

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

### அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

### மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய் அறிக்கை!

கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகின்ற 14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றும், திமுக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கும் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் 7.12.25, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி மகாலில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் ஆலோசனைக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆலோசனைகள் வழங்குகிறார்.

| வ. எண் | தொகுதி | முன்னிலை | | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | கொளத்தூர் | ஐ.சி.எப்.வ.முரளிதரன், ப.செ., எஸ்.தனசேகர், மா.து.அ, என்.திலிப்குமார், ப.அ, | எ.நாகராசன், ப.செ., கே.பிரசாத், ப.அ, | காலை 10.00 மணி |
| 2. | அம்பத்தூர் | ஜோசப் சாமுவேல், ப.செ., MTR நாகராஜ் ப.செ., இரவை.பிரபு, ப.அ, ஜெ.பி.ஆர்.ரகு, ப.அ | DSP ராஜகோபால், ப.செ., ஜெ.பாலமுருகன், மா.து.அ, என்.பி.எம்.வசந்த், ப.அ, | காலை 10.30 மணி |
| 3. | எழும்பூர் | சொ.வேலு, ப.செ., க.வினோத், மா.து.அ, சே.பாலாஜி, ப.அ | வி.சுதாகர், ப.செ., த.ஜெயகுமார், ப.அ, | காலை 11.00 மணி |
| 4. | திரு.வி.க.நகர் | எம்.சாமிகண்ணு, ப.செ., ஜெ.மணிகண்டன், ப.அ, | செ.தமிழ்வேந்தன், ப.செ., பா.ஸ்ரீதர்ராஜன், ப.அ | காலை 11.30 மணி |
| 5. | வில்லிவாக்கம் | கூ.பீ.ஜெயின், ப.செ., ஜி.ஜெ.பிரபு, மா.து.அ, வெ.மகேந்திரன், ப.அ | வே.வாசு, ப.செ., ம.ஜெகதீஸ்வரன், ப.அ, | பகல் 12.00 மணி |
| 6. | துறைமுகம் | எஸ்.முரளி, ப.செ., ப.ஜெகதிஷ் மா.து.அ, ந.மோகன், ப.அ | எஸ்.இராஜசேகர், ப.செ., பி.செந்தில்குமார், ப.அ, | பகல் 12.30 மணி |

மேற்கண்ட அட்டவணைப்படி அந்தந்த தொகுதிகுட்பட்ட சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் வட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**வானவில் விஜய்**
அமைப்பாளர்,
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி